பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 23 வெள்ளிக்கிழமை 08.08.2025 கதிர் 272

## இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் இதுவரையில் 7 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும்,அரசியல்வாதிகளின் 149 உறவினர்களும் லஞ்சம் ☞2

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும்

## நாடாளுமன்றத்தில் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்குமனிதாபிமானஅடிப்படையில் அரசுத்தலைவர்மன்னிப்புவழங்கவேண்டும் என்றுநீதிஅமைச்சரிடம்நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடை பெற்ற அமர்வின் போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டவர்கள் தொடர்பில் நீதியமைச்சர் குறிப்பிட்ட விடயங்களைச் சுட்டிக்காட்டி உரையாற்றுகையில்இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்க அவதானிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் குறிப்பிடுவது வரவேற்கத்தக்கது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கதிர்காமதம்பிசிவகுமார்,விக்னேஸ்வரநாதன் பார்த்திபன்,கிருஷ்ணசாமி ராமசந்திரன், சண்முகலிங்கம் சூரியகுமார்,ஜோன்ஷன் கொலின் லெவன்டினோ, சச்சிதானந்தம் ஆனந்த சுதாகர்,ஏ.எச். உமர் காதர், தங்கவேலு விமலன், செல்வராஜா ☞2

## ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்று இறந்தால் இனி ரூ. 10 லட்சம்

### நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர்

இலங்கையிலிருந்துஆழ்கடலில்மீன்பிடிக்கச் சென்று உயிரிழக்கும் அல்லது பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படும். அவ்வாறு இறக்கும் மீனவர்களுக்கு இதுவரை காலம் வழங்கப்பட்டு வந்த இரண்டு இலட்சம் ரூபா நட்ட ஈட்டை பத்து இலட்சமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கடற்றொழில் நீதியல் வள அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அட்டாளைச்சேனை பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற இரண்டு பேர் கடலில் அடித்துச் செல்லப்பட்டு ஒருவர் 130 நாட்களுக்குப் பின்னர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டதாகவும் ஒருவர் உயிரிழந்திருந்தார் எனவும் குறிப்பிட்டு அவர்களுக்கான நட்ட ஈடு தொடர்பில் கேள்வி எழுப்பினார். அவ்வாறு வழங்கப்படும் நட்ட ஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும் அவர் வினவினார்.

அத்துடன் இவ்வாறு வடக்கிலிருந்து மீன்பிடிக்க சென்றவர்கள் தொடர்பிலும் குறிப்பிட்ட அவர், அவர்களது படகுகளும் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை மீளப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?என்றும் ☞3

## சர்வதேச நாணய நிதியத் திட்டத்தை ஒரு வரி மாற்றமின்றி ஏற்றுள்ளனர்

### ஆளும்தரப்பைச் சாடிய ஹர்ஷ டி சில்வா

நாணயநிதியத்தின்நீட்டிக்கப்பட்ட செயற்திட்டத்தை அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க முழுமையாகஏற்றுக்கொண்டுள்ளார். மாற்றமின்றி செயற்படுத்துகிறார். சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்ட முன்மொழிவுகளை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டார்கள். ஆட்சிக்குவந்தவுடன்ஒருசொல்கூட மறுசீரமைக்கப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் ☞2

## 15 தமிழ் அரசியல் கைதிகள் மன்னிப்புக்கு விண்ணப்பம்

### அரசுத் தலைவரே தீர்மானம் எடுக்கவேண்டும் என்கிறார் நீதி அமைச்சர்

தமிழ் அரசியல் கைதிகளில் சுமார் 15 பேர் அரசுத் தலைவர் பொதுமன்னிப்பு தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.இவ்விடயத்தில்எனக்குஉத்தரவாதம் வழங்க முடியாது.அரசுத் தலைவரே தீர்மானம் எடுக்க வேண்டும். சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றஅமர்வின்போதுநிலையியல் கட்டளை 27 இன் இரண்டின் கீழ் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன் ☞2

## மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சட்ட, கட்டமைப்பு மறுசீரமைப்பு அவசியம்

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நீதி அமைச்சரிடம் வலியுறுத்து

மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதுமான செயன்முறைக்குத் துணையளிக்கக்கூடிய சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளுமாறும், அவற்றின் இயலுமையை வலுப்படுத்துமாறும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலாநிதி பாக்கிசோதி சரவணமுத்துவினால் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் உண்மை மற்றும் நீதியை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய முக்கிய மறுசீரமைப்புக்கள் தொடர்பில் நாம் பல தசாப்தகாலமாக வலியுறுத்திவருகின்றோம். அந்தவகையில் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் இலங்கையின் கடந்தகால வன்முறைகளுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து விசேட ☞3 கவனம் செலுத்தப்படவேண்டும்.

## பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு இந்த ஆளும்தரப்பு நிதி விடுவிப்பதில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. குற்றச்சாட்டு

அரச வருமானத்தை அதிகரித்து விட்டு அதை வீட்டில் வைக்க முடியாது. வருமானத்தின் உச்ச பயனை நாட்டு மக்களுக்கு வழங்கவேண்டும். இந்த ஆளும்தரப்பு பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ☞2

## வாகன இறக்குமதி வரிகள் குறித்து சபையில் சஜித் சரமாரியாக கேள்வி

வாகன இறக்குமதி தொடர்பில் அதிலும் குறிப்பாக மின்சார வாகன இறக்குமதி தொடர்பில் காணப்படும் வரிக் குழப்பங்கள் தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் சரமாரியாகக் கேள்விகளை முன்வைத்தார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நிலையியற்கட்டளை 27/2 இல் விசேட கூற்றை முன் வைத்துஉரையாற்றியபோதுஇதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞2

## 'வளமான நாடு அழகிய வாழ்க்கை' வாக்குறுதி எப்போது நடைமுறைக்கு?

### எதிர்க் கட்சித் தலைவர் அரசுத் தலைவரிடம் கேள்வி

நாட்டில் தீவிரமடைந்துள்ள தொழின்மை பிரச்சினைக்கு தீர்வு காணாமல்2028ஆண்டுமுதல் எவ்வாறு அரசமுறைகடன்களைமீளசெலுத்துவது. மக்களுக்கு வழங்கிய செல்வந்த நாடு - அழகிய வாழ்க்கை வாக்குறுதி திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும். அரசுத் தலைவர் உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நாட்டின் தற்போதைய பொருளாதாரம் மீதான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பைநெருக்கடிக்குள்ளாக்க பல்வேறு தரப்பினர் முயற்சிக்கின்றனர் என்று அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டிய அவசியம் எதிர்க்கட்சிகளுக்கு கிடையாது. ஆளும்தரப்பின்பலவீனத்தை வெளிப்படுத்தும்போது அதனை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பிரதமர்பதவியைஏற்றுக்கொள்ளுமாறு என்னிடம் 61 முறை குறிப்பிட்டார்கள். மக்களாணையுடன் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான்என்றும்உறுதியாகவுள்ளேன். ☞3

## மன்னார் காற்றாலைத் திட்டத்தை இடைநிறுத்த நேற்றுத் தீர்மானம்

மன்னார்காற்றாலைமின்திட்டம்தொடர்பில்எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு சகல தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வு காண்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தி திட்ட பணிகளை இடைநிறுத்துவதற்கும் மின்சாரத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின்திட்ட விவகாரம் தொடர்பில் இன்னும் இரண்டு வாரங்களுக்கு பின்னர் அரசுத் தலைவர் தலைமையில் விசேட பேச்சில் ஈடுபடுபதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மன்னார்காற்றாலைதிட்டம்மற்றும்இல்மனைட்கனிய வளம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## அமைச்சரிடமிருந்து தகுந்த பதில் இல்லையேல்

# திங்கட்கிழமை முதல் தொடர் போராட்டம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முடிவு

சுகாதார அமைச்சின் சில உயர் அதிகாரிகளின் தீர்மானத்தால் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள சுமார் 135 வைத்திய சாலைகள் மூடப்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது. ராஜித, கெஹெலிய காலங்களில் அதிகாரிகள் செய்ததையே தற்போதும் செய்கின்றனர். சுகாதார கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அமைச்சரிடமிருந்து தகுந்த பதில் கிடைக்காவிட்டால் திங்கட்கிழமை முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் சுகாதாரக் கட்டமைப்பில் நெருக்கடி ஏற்படும். எது எவ்வாறிருப்பினும் நாடளாவிய ரீதியில் 24 மணித்தியாலங்கள் தடையற்ற மருத்துவ சேவையை முன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். நாட்டில் 23 000 சிரேஷ்ட வைத்தியர்கள் காணப்படுகின்றனர். வருடாந்தம் 2000 வைத்தியர்கள் இந்த கட்டமைப்பில் இணைகின்றனர். எனவே இவர்களுக்கான நியமனங்களை முறையாக வழங்க வேண்டியதும் அவசியமானதாகும்.

அத்தோடு இடமாற்றங்களும் முறையாக இடம்பெறவேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் மாத்திரமே சுகாதார கட்டமைப்பின் இருப்பினை தீர்மானிக்க முடியும். சுகாதார அமைச்சின் சுகாதார சேவைப்பிரிவின் பணிப்பாளர் மற்றும் பிரதி பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டவர்களின் செயற்பாடு;களால் 23000 சிரேஷ்ட வைத்தியர்களின் இடமாற்றங்கள் முற்றாக சீர்குலைந்துள்ளன. இது சுகாதார அமைச்சினால் உருவாக்கப்பட்ட ஒரு குழப்பமாகும்.

ஆனால் சுகாதார அமைச்சரிடமிருந்து இதற்கான ஸ்திரமான தீர்வு கிடைக்கவில்லை. இந்த பிரச்சினை தீவிரமடைந்தமைக்கான காரணமும் இதுவேயாகும். 2025ஆம் ஆண்டுக்கான இடமாற்ற பட்டியல் 9 மாதங்கள் தாமதமாகவே வெளியானது. அதில் சுமார் 5000 வைத்தியர்கள் உள்ளடங்குகின்றனர். அந்த பட்டியலில் காணப்பட்ட 78 வெற்றிடங்கள் சட்டத்துக்கு முரணாக தன்னிச்சையாக புறக்கப்பட்டுள்ளன. இதனால் குறித்த 78 வைத்தியர்கள் மாத்திரமின்றி, பட்டியலுள்ள அனைவரும் பாதிக்கப்படுவர்.

அது மாத்திரமின்றி பின்தங்கிய பிரதேசங்களுக்கான வைத்தியர் நியமனங்களும் இவ்வாறு தன்னிச்சையாக நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால் எதிர்வரும் ஓரிரு மாதங்களில் பிரதான வைத்தியசாலைகள் உட்பட சுமார் 135 பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படவுள்ளது. ராஜித, கெஹெலிய காலங்களில் அதிகாரிகள் செய்ததையே தற்போதும் செய்கின்றனர். அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவையும் அவர்கள் இந்த யுகத்துக்கே அழைத்துச் செல்லவே முற்படுகின்றனர்.

இந்த பிரச்சினைக்கு அமைச்சரிடமிருந்து தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 72 மணித்தியாலங்களுக்குள் பிரச்சினைகளுக்கான முறையான தீர்வு வழங்கப்படாவிட்டால் எமது தீர்மானத்திலும் எவ்வித மாற்றமும் இல்லை என்றார்.

## இனி இது .....

அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதமர் ஹரினி தெரிவித்திருக்கிறார்.

லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 100 பொது அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

2024ஆம் ஆண்டில் லஞ்சக் குற்றச்சாட்டில் 86 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜூன் 30, 2025 நிலவரப்படி 34 பேர் லஞ்சக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஊழல் குற்றச்சாட்டில் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அரசியல்வாதிகள் முன்னாள் அரசியல்வாதிகள் ஊழல் குற்றச்சாட்டில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். . பொது அதிகாரிகள் முன்னாள் பொது அதிகாரிகள் 2024 ஆம் ஆண்டில் லஞ்சக் குற்றச்சாட்டில் 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜூன் 30, 2025 நிலவரப்படி, லஞ்சக் குற்றச்சாட்டில் 28 பேர். ஊழல் குற்றச்சாட்டில் 14 பேர் என மொத்தம் 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் விவரம் தந்தார்.

2024 ஆம் ஆண்டில் லஞ்சக் குற்றச்சாட்டில் பொதுமக்கள் 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜூன் 30, 2025 நிலவரப்படி, லஞ்சக் குற்றச்சாட்டில் ஆறு பேர். ஊழல் குற்றச்சாட்டில் மூன்று பேர். மொத்தம் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

ஜூன் 30, 2025 நிலவரப்படி அரசியல்வாதிகளின் உறவினர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் ஐந்து. 2024 இல் லஞ்ச குற்றச்சாட்டுகள் எண்பத்தி ஆறு. 2025 இல் லஞ்ச குற்றச்சாட்டுகள் 34. ஊழல் குற்றச்சாட்டுகள் 29. மொத்தம் 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதெல்லாம் சரிதான். நூற்றுக் கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்பதெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியாக இருந்தபோது சொல்லிவந்த எந்தவொரு பெரும் ஊழல், மோசடிகள் குறித்தும் இதுவரையிலும் யாரும் கைது செய்யப்படவுமில்லை, அதற்கான விசாரணைகள் தொடங்கப்பட்டதற்கான அறிகுறிகளும் இல்லை. அப்படியிருக்கும்போது தும்பைவிட்டு வாலைப் பிடிப்பது போன்ற இந்த நடவடிக்கைகளை வீரப் பிரதாபங்களாக ஆளும்தரப்பு பட்டியலிடுவது அவர்கள் மீது நம்பிக்கையீனத்தையே அதிகரிக்கின்றது.

பெருந்தலைகள் மீது ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் பாயும்போதுதான் சமூகத்திற்கு அது உறுதியான செய்தியை வழங்கும். மக்களுக்கும் நம்பிக்கை பிறக்கும். அது எப்போது நடக்கப்போகிறதோ....!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ் அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிருபாகரன், தம்பியையா பிரகாஷ் ஆகியோர் 14 முதல் 30 ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் எதிர்காலம் மற்றும் அவர்களின் குடும்பத்தை கருத்திற்கொள்ளுங்கள், ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் பெற்றோர் இல்லாமல் வாழ்கிறார்கள். அந்த பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் கரிசனை கொள்ளுங்கள்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் அரசுத் தலைவர் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதை இந்த உயரிய சபை ஊடாக வலியுறுத்துகிறேன் என்றார்.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற நாட்டின் தற்போதைய பொருளாதாரம் மீதான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க சபையில் சண்டித்தனமான முறையில் உரையாற்றினார். எம்மை கேலிக்குள்ளாக்கினார். அரசுத் தலைவர் எமது பழைய நண்பர் என்பதால் நாங்கள் அவரை நகைப்புக்குள்ளாக்கவில்லை. அரசுத் தலைவர் பதவிக்கான கௌரவத்தை நாங்கள் அவருக்கு வழங்குவோம்.

கடன் பெற்றாவது வீதிகளை அபிவிருத்தி செய்வதாகவும், அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதாகவும் அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். கடன் பெறுவதற்கு முன்னர் அடிப்படை கொள்கை என்னவென்பதை வெளிப்படுத்துங்கள். இலங்கை மின்சார சபையை விற்பனை செய்ய போவதில்லை. சூழ்ச்சியாளர்களிடமிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டும் என்றும் ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

சூழ்ச்சி தேசிய மக்கள் சக்தியில் உள்ளதா அல்லது மக்கள் ஜேவிபியில் உள்ளதா என்பதை வெளிப்படுத்துங்கள். பிரதமர் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்ட முன்மொழிவுகளை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு சொல்கூட மறுசீரமைக்கப்படவில்லை.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்ட நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயற்திட்டத்தை அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார். மாற்றமின்றி செயற்படுத்துகிறார்.

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த நாட்டையே பொறுப்பேற்றதாக அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். இது முற்றிலும் தவறானது. 2024ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்படும்போது பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாகவும், திறைசேரியின் கையிருப்பு 5 பில்லியன் டொலர்களாகவும் காணப்பட்டது. அத்துடன் 70 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் 1 சதவீதமாக குறைக்கப்பட்டது. ஆகவே பொருளாதார ரீதியில் வீழ்ந்து எழுந்த நாட்டையே அரசுத்தலைவர் பொறுப்பேற்றார்.

வீழ்ச்சியடைந்த நாட்டைப் பொறுப்பேற்றோம் என்று பொருளாதாரம் பற்றித் தெரியாதவர்களிடம் குறிப்பிடுங்கள் முடிந்தால் எம்முடன் விவாதத்துக்கு வாருங்கள் தரவுகளுடன் விடயங்களை வெளிப்படுத்துகிறோம். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அரசுத் தலைவர் இணக்கம் தெரிவித்துள்ளார். கடன் பெறும் எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே கடன் பெற்று வீதிகளை அபிவிருத்தி செய்ய முடியாது.

வெளிநாட்டுக் கொள்கை ரீதியிலான கடன் பெற வேண்டுமாயின் ஆசிய அபிவிருத்தி மற்றும் ஜெய்கா நிறுவனங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை பெற பொருளாதார மறுசீரமைப்ஷ்பை மேற்கொள்ள வேண்டும். கடன் அல்லது அரச முதலீடுகள் ஊடாகவேனும் ஆரம்ப செலவுகளை 13 சதவீதமாக குறைக்கவேண்டும். எண்ணியதை போன்று செலவு செய்ய முடியாது.

தேர்தல் மேடைகளில் குறிப்பிட்டதை போன்று அரச செலவுகளை மேற்கொள்ள முடியாது. வாய்க்கு வந்த அனைத்தையும் பேச முடியும். ஆனால் அதனை செயலில் காட்டுவது கடினம். பொருளாதாரம் தொடர்பில் பெலவத்தையின் நிலைப்பாடு என்னவென்பதும் கேள்விக்குள்ளாகியுள்ளது.

எமது கொள்கையை கேள்வியெழுப்ப முன்னர் தமது பொருளாதார கொள்கையை அரசுத் தலைவர் வெளிப்படுத்தவேண்டும். கொடஹேவா வந்தார் சென்று விட்டார். அவர் எம்முடன் இல்லை. கொடஹேவா வரலாமலிருந்திருந்தால் எமது பொருளாதார திட்டத்தை சமூகமயப்படுத்தியிருக்கலாம். பெலவத்தையின் சூழ்ச்சியிலா கொடஹேவா எம் தரப்புக்கு வந்தார் என்ற சந்தேகம் எமக்கு உள்ளது.

அமெரிக்காவின் தீர்வை வரி பற்றி அதிகம் பேசப்பட்டுள்ளது. இந்தியாவின் நிலையை பார்த்து சிரிக்க வேண்டாம் ஏனெனில் நாம் வீழ்ந்திருந்த போது இந்தியா தான் எமக்கு கைக்கொடுத்தது. பத்திரிகை ஒன்றுக்கு நான் வழங்கிய நேர்காணலில் ஒரு பகுதியை மாத்திரம் அரசுத் தலைவர் குறிப்பிடுகிறார். இலங்கைக்கு 15 முதல் 20 சதவீதமளவில் வரி சலுகை கிடைக்கும் என்று நான் குறிப்பிட்டிருந்தேன். அந்த முழுமையான நேர்காணலை பாருங்கள். அதன் பின்னர் பேசுங்கள் என்றார்.

## 15 தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த நாடாளுமன்ற அமர்வில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விடுதலை புலிகள் அமைப்புடன் தொடர்புடையதான குற்றச்சாட்டின் அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் சந்தேகநபர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேகநபர்கள் 4 பேர், விடுதலை புலிகள் அமைப்பின் 8 உறுப்பினர்கள், ஆயுள் தண்டனை கைதிகள் 3 பேர், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீடு செய்துள்ள 2 கைதிகள், 2 கொலைத் தண்டனைக் கைதிகள் 2 பேர் வெலிக்கடை, மகசின், மஹர, தும்பர,பூஸா மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள் தமது தண்டனைக் காலம் நிறைவடைந்ததன் பின்னர் விடுதலையாவார்கள் அல்லது நீதிமன்றத்தின் ஊடாக பிணையளிக்கப்படும் பட்சத்தில் விடுவிக்கப்படுவார்கள். அல்லது மேன்முறையீடு செய்து பிணை பெற்றுக்கொள்ளலாம்.

சிறைக் கைதிகள் விடுவிப்பு தொடர்பில் அரசமைப்பின் 34 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசுத்தலைவர்யால் பொதுமன்னிப்பு வழங்கப்படும் ஏற்பாடும் காணப்படுகிறது. தமிழ் அரசியல் கைதிகளில் சுமார் 15 பேர் அரசுத் தலைவர் பொதுமன்னிப்பு தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இவ்விடயம் தொடர்பில் என்னைச் சிலர் சந்தித்தனர். இவ்விடயத்தில் எனக்கு எவ்வித உத்தரவாதமும் வழங்க முடியாது. ஏனெனில் அது நீதியமைச்சின் விடயதானத்துக்குள் வராது. இவ்விடயம் குறித்து அரசுத் தலைவரே தீர்மானம் எடுக்க வேண்டும். சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன் என்றார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிப்பதில்லை. அது ஆளும்தரப்பின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நாட்டின் தற்போதைய பொருளாதாரம் மீதான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச வருமானத்தை அதிகரித்து விட்டோம் என்று ஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. ஆனால் முன்னேற்றத்தின் தன்மை நடுத்தர மக்களின் வாழ்க்கையில் பிரதிபலிக்கவில்லை. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் பாதிக்கப்பட்ட நிலையில்தான் உள்ளார்கள்.

ஆளும்தரப்பு தனது முதலாவது வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக சுகாதாரம் மற்றும் உணவு ஆகிய அடிப்படை தேவைகள் மீதான வெற் வரியை குறைப்பதாக குறிப்பிட்டது. ஆனால் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

அரச வருமானத்தை அதிகரித்து விட்டு அதனை வீட்டில் வைக்க முடியாது. வருமானத்தின் உச்சபலனை நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும். இந்த ஆளும்தரப்பு பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி விடுவிப்பதில்லை. அது அரசாங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது.

கடந்தகால ஊழல் மோசடிகள் பற்றி பிரதமரிடம் கேள்வியெழுப்பினேன். அவர் வழங்கிய பதில் திருப்தியானதாக அமையவில்லை. கடந்தகால ஊழல்வாதிகளை பாதுகாக்கும் வகையில்தான் ஆளும்தரப்பு செயற்படுகிறது. அரசுத் தலைவர் தனது பிள்ளைக்கு தொழில் பெற்றுக்கொடுத்த நன்றிக் கடனை நாமல் ராஜபக்சவை விமானத்தில் சந்தித்து வெளிப்படுத்தியுள்ளார். நாமலுடன் பேசிய விடயங்களை அரசுத் தலைவரால் வெளிப்படுத்த முடியுமா,

ராஜபக்சக்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளவில்லை. என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் தான் ஆளும்தரப்பு செயற்படுகிறது. அரசுத்தலைவரின் போலியான வாக்குறுதிகள் மற்றும் மெருகூட்டப்பட்ட பேச்சுக்கு மக்கள் இனி ஏமாற்றமடைய போவதில்லை என்றார்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று விசேட கலந்துரையாடல் மின்சாரத்துறை அமைச்சர் குமார ஜயக்கொடி தலைமையில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பிரதிநிதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு உட்பட பல்வேறு தரப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தின் போது மன்னார் காற்றாலை மின்திட்டத்தால் மன்னார் மாவட்ட மனித மற்றும் இயற்கை வாழிடங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. திட்டத்தின் ஆரம்ப

தொடர்ச்சி 3 ம் பக்கம்.....

காலைக்கதிர்
Kalaikkathir

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை மன்னார் மாவட்ட சிவில் பிரஜைகள் இதன்போது எடுத்துரைத்துள்ளனர்.

காற்றாலை மின்திட்டம் குறித்து சகல தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கும். அதுவரையில் இத்திட்ட பணிகளை இடைநிறுத்துவதற்கும் மின்சாரத்துறை அமைச்சர் தலைமையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விடயம் குறித்து இரண்டு வாரங்களுக்கு பின்னர் அரசுத்தலைவர்யுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மின்திட்ட பணிகளுக்கான பொருத்தல் உபகரணங்களை தீவுக்குள் கொண்டு செல்லாமல் அவற்றை பிறிதொரு இடத்தில் பாதுகாப்பாகவைப்பற்குரியநடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு இதன்போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## மனிதப் புதைகுழி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதப்புதைகுழி விவகாரத்தில் தடயவியல் ஆய்வு உள்ளடங்கலாக அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டும் அதேவேளை, இவ்விடயத்தில் உண்மையைக் கண்டறிவதற்கும், நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும் உரியவாறான நிபுணத்துவம் மற்றும் வளங்கள் என்பன உடனடியாகத் தேவைப்படுகின்றன. அதற்கமைய மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சுயாதீனமானதும், பக்கச்சார்பற்றதும், பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதுமான செயன்முறைக்குத் துணையளிக்கக்கூடிய சட்ட மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளுமாறும், அவற்றின் இயலுமையை வலுப்படுத்துமாறும் கோருகின்றோம்.

வட, கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி இயங்கிவருபவர்கள் உள்ளடங்கலாக இதனுடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினரிடமும் நடாத்திய நேர்காணல்களில் சில முக்கிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

தடயவியல் நிபுணத்துவத்தை வலுப்படுத்தல், சுயாதீனமான முறையில் மரபணு பரிசோதனையை மேற்கொள்வதற்கு அவசியமான வளப்பகிர்வு மற்றும் மறுசீரமைப்புக்களுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சுயாதீன விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடரலுக்கு அவசியமான நகர்வுகளைமேற்கொள்ளல், மனிதப்புதைகுழி அகழ்வின்போது உரியவாறான நியமங்கள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்தல், மனிதப்புதைகுழி அகழ்வு மற்றும் விசாரணை செயன்முறைகளில் சர்வதேச கண்காணிப்பு மற்றும் ஒத்துழைப்பை உள்வாங்கல், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான உளவியல்சார் உதவிகளை வழங்கல், பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய செயன்முறையைக் கையாளல், இவ்விவகாரம் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடரல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கான வளங்களை ஒதுக்கீடு செய்தல் என்பனவே அவையாகும்.

வலிந்து காணாமலாக்கப்படல்கள், மனிதப்புதைகுழி அகழ்வுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய விவகாரங்கள்தொடர்பில்காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய கட்டமைப்புக்களால் குறிப்பிடத்தக்களவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இக்கட்டமைப்புக்களின் செயற்பாடுகளில் எவ்வித அரசியல் தலையீடும் மேற்கொள்ளப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும், அவை சுயாதீனமாக இயங்குவதற்கு அவசியமான வளங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## ஆழ்கடல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கேள்வி எழுப்பினார்.

அதுதொடர்பில்அமைச்சர்பதிலளித்தபோது தெரிவித்ததாவது:

இலங்கையிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச்சென்று இவ்வாறு அந்தந்த நாடுகளின் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் குறித்த படகுகள் அந்த நாட்டின் வழக்குப் பொருளாக பயன்படுத்தப்படுவதால் உடனடியாக அந்த படகுகளை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க முடியாது.

வழக்கு நடவடிக்கைகள் முடிந்த பின்னர் அந்தப் படகுகளை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.அப்போது அந்தப் படகுகள் சேதமடைந்திருந்தால் அதற்கு ஏற்ப அதற்கான நட்ட ஈடு அல்லது உதவித் தொகையை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடலுக்கு மீன் பிடிக்கச் செல்பவர்கள் பல்வேறு பேரிடர்களினால் பாதிக்கப்படுவது உண்டு. அவர்களில் சிலர் தெரிந்தே கடல் எல்லைகளைத் தாண்டி பின்பற்ற வேண்டிய சட்டங்களை மீறி செயற்படும்போதும் இவ்வாறான காணாமல் போதல் அல்லது பாதிப்புகள் இடம் பெறுகின்றன.

மீனவர்கள் பலர் மாலைதீவு, இந்தியா மொரீசியஸ் உட்பட பல்வேறு நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் நடைமுறையிலுள்ள சட்டங்களை முறையாக பின்பற்றிச் செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்கும் அவர்களது படகுகளுக்கும் நட்ட ஈடு அல்லது இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் .

எமது கடற்றொழில் மத்திய நிலையத்தில் அவர்களை கண்காணிக்கும் உரிய உபகரணங்கள் உள்ளதால் எவ்வாறு அவர்கள் பாதிக்கப்பட்டார்கள், அவர்கள் எங்கு உள்ளார்கள் என்பது தொடர்பான விவரங்களை அதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். அதன் உதவியுடனே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

எவ்வாறாயினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்குவது, அவர்களின் படகுகள் சேதமடைந்திருந்தால் அதற்கு நட்ட ஈடு அல்லது உதவித்தொகை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## வளமான நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்ச்சியின் ஊடாக அதிகாரத்தை கைப்பற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது. ஜனநாயக ரீதியாகவே ஆட்சிக்கு வர முயற்சிப்போம்.

பாரம்பரியமான எதிர்க்கட்சிகளை போன்று நாங்கள் செயற்படவில்லை. பொருளாதார மீட்சிக்காக ஆளும்தரப்பு எடுத்த சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம். நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் நாங்கள் ஒருபோதும் செயற்படவில்லை.

நாட்டில் பொருளாதார நிலைமை தொடர்பில் அரசுத் தலைவர் சிறந்த திட்டங்களை முன்வைத்து உரையாற்றுவார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்.ஆனால் அவ்வாறொன்றும் இடம்பெறவில்லை. நாட்டில் தொழிலின்மை பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளது. வேலையின்மை பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் 2028 ஆம் ஆண்டு முதல் எவ்வாறு அரசமுறை கடன்களை மீள செலுத்துவது.

மக்களுக்கு வழங்கிய 'வளமான நாடு – அழகிய வாழ்க்கை' வாக்குறுதி திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும் என்று அரசுத் தலைவர் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.அரசுத் தலைவரின் கருத்துக்கள் ஒரு கட்டமைக்கப்பட்ட பொருளாதார வரைபடத்தை முன்வைப்பதற்குப் பதிலாக டிசெம்பரில் அரசியல் சதித்திட்டங்களில் கவனம் செலுத்தியதாகக் காணப்பட்டது.

இது நெருக்கடியின்போது ஒரு அரச தலைவரிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டதல்ல, அழுத்தத்தின் கீழ் செய்யப்பட்ட உரையாகவே காணப்பட்டது.அமெரிக்காவின் வரிகளை 44 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக குறைத்த போதிலும், ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க ஆளும்தரப்பிடம் ஒரு உறுதியான திட்டம் இல்லை.

விரைவான ஏற்றுமதி வளர்ச்சிக்கான தொலைநோக்கு பார்வை அல்லது நேரடி வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கான உத்திகள் இல்லை.அரசுத் தலைவர் தான் இனி ஒரு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அல்லர் என்பதை மறந்துவிட்டதாகத் தெரிகிறது. அவரது உரையில் நாட்டிற்கு இப்போது தேவைப்படும் பொருளாதார பகுப்பாய்வு குறிப்பிடப்படவில்லை என்றார்.

## வாகன இறக்குமதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

வாகன இறுமதியின்போது வரி விதிப்பது பல்வேறு தரப்புகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிக்கலாக அமைக்கப்பட்டிருப்பதால், வரிவலையிலிருந்து தப்பித்து இறக்குமதி வரி ஏய்ப்புகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்பது நிபுணர்களின்கருத்தாகும். இலகுவானமற்றும் வெளிப்படைத்தன்மை கொண்ட வாகன இறக்குமதிவரிமுறையை அறிமுகப்படுத்துவது நாளுக்குநாள் தாமதமாவதால் அரசின் வருமானம்இழக்கப்படுவதுடன், சமநிலையற்ற சந்தைப் போட்டி ஏற்படுகிறது. இறுதி நுகர்வோரும் கடுமையான சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

இதன்பிரகாரம், நான் பின்வரும் கேள்விகளை முன்வைக்கிறேன்.

இறக்குமதி மின்சார வாகனங்களுக்கு வரி விதிக்கப்படுவது அந்த வாகனங்களின் அதிகபட்ச மோட்டார் திறன் அடிப்படையிலா? தரப்படுத்தப்பட்ட மோட்டார் திறன் அடிப்படையிலா? அல்லது வேறு என்ன தேர்வுமுறையில் இதில் சேர்க்கப்பட்டுள்ளன? அந்த எல்லைகளின் அடிப்படையில் விதிக்கப்படும் வரிகள் வெவ்வேறாக அறிவிக்க முடியுமா?

பயன்படுத்தப்பட்ட அல்லது புதிய பி.வை.டி. மின்சார வாகனங்களை இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் இதுவரை அந்த வாகனங்களை இசைவாக்கம் செய்யும் போது என்ன திறன் அடிப்படையில் வரி செலுத்தியுள்ளன என்பதை வெவ்வேறாக அறிவிக்க முடியுமா?

இலங்கைக்குபி.வை.டி. உள்நாட்டுபிரதிநிதி நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்படும் (ஏடிடிஓ 3 மற்றும் பிற) மின்சார வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச திறன் மற்றும் தரப்படுத்தப்பட்ட திறன்கள் என்ன?

இதுவரை சர்ச்சைக்குரிய நிலமை உருவாகியுள்ள இந்த மின்சார வாகனங்களின் உண்மையான திறனை உறுதிப் படுத்துவதற்கான தொடர்புடைய சோதனை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளனவா? அந்தச் சோதனைகளை நடத்துவது யார்? அதற்கு சர்வதேச அளவிலான ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளதா? அதன் முன்னேற்றம் என்ன?

வரி விதிப்பின் குழப்பத்தின் காரணமாக எத்தனை வாகனங்கள் சுங்கத்தில் சிக்கியுள்ளன? இதுவரை எத்தனை வாகனங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன? வரிக் குழப்பத்திற்கு தீர்வு கிடைக்கும் வரை இந்த அனைத்து வாகனங்களையும் மேலும் சுங்கத்தில் தடுத்து வைப்பது தொடருமா? இல்லையென்றால், இது தொடர்பாக அரசின் தீர்வு என்ன?

இதனால் இன்று வரை அரசு இழந்துள்ள வரி வருமானம் எவ்வளவு? அதற்கு பொறுப்பானவர்கள் யார்? அது தொடர்பாக அரசு எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

இந்தபிரச்சினையிலிருந்துகற்றுக்கொண்டு வாகன இறக்குமதி தொடர்பான வரிக் கொள்கையை திருத்துவதற்கு அரசிடம் பரிந்துரைகள் உள்ளனவா? அது எப்போது தொடங்கப்படும்? எனக்கேட்டார்

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை அரசின் கொள்கை முடிவே அவசியம்

நேற்றைய (07.08.2025) நாடாளுமன்ற அமர்வில், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைப் பிரச்சினை மீண்டும் மையவாதமாகியது. வட மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், பல ஆண்டுகளாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறைகளில் வாடும் கைதிகளின் நிலையை உருக்கமாக எடுத்துரைத்தார். 14 முதல் 30 ஆண்டுகள் வரை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களை அவர் சுட்டிக்காட்டியபோது, அந்த பட்டியலின் பின்னால் நிற்கும் குடும்பங்களின் துயரம் வெளிப்படையாக தெரிந்தது. குறிப்பாக ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் பெற்றோர் இல்லாமல் வாழும் துயரைக் கூறியபோது, பிரச்சினை வெறும் அரசியல் விவாதமாக அல்லாமல், மனிதாபிமானக் கோணத்தில் அணுகப்பட வேண்டிய அவசியம் தீவிரமாய் உணர்த்தப்பட்டது.

சிறீதரன், இக்கைதிகள் குறித்த தீர்வு மனிதாபிமான அடிப்படையிலும், அரசுத் தலைவர் பொதுமன்னிப்பு வழங்கும் அரசமைப்புச் சட்டத்தின் 34ஆம் பிரிவின் அடிப்படையிலும் அமைய வேண்டும் என வலியுறுத்தினார். உண்மையில், இது அவர் முதன்முறையாகச் சொல்வது அல்ல. கடந்த பல ஆண்டுகளாகவே, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையில் ஆளும்தரப்பு உறுதியான கொள்கை முடிவு எடுக்க வேண்டும் என்பதே சம்பந்தன் போன்ற மூத்த தமிழ் அரசியல்வாதிகள் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வரும் நிலைப்பாடு. ஆனால் அந்தக் கோரிக்கை இன்றும் நிறைவேறாமல் இருப்பது, அரசின் தீர்மானக் குறையை வெளிப்படுத்துகிறது.

நீதியமைச்சர் தனது பதிலுரையில், இக்கைதிகளில் யார் யார் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் அல்லது சந்தேகநபர்கள் என்பதையும், அவர்கள் எந்தச் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் விரிவாகக் கூறினார். அதோடு, தண்டனைக் காலம் முடிவடைந்தாலோ, நீதிமன்ற பிணை வழியாகவோ, அல்லது பொதுமன்னிப்பு மூலம் விடுதலை பெறும் சட்ட வாய்ப்புகளும் உள்ளன என்பதைத் தெரிவித்தார். மேலும், சுமார் 15 பேர் அரசுத் தலைவர் பொதுமன்னிப்புக்காக விண்ணப்பித்திருப்பதையும் அவர் குறிப்பிட்டார். ஆனால், முக்கியமாக, பொதுமன்னிப்பு வழங்குவது தமக்குள் வராது, அரசுத் தலைவரே தீர்மானிக்க வேண்டிய விடயம் என்ற நிலைப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தினார்.

இங்கு அடிப்படைச் சிக்கல் வெளிப்படுகிறது. அரசின் உள் இயந்திரத்தில் யார் முடிவெடுக்க வேண்டும் என்பதில் குழப்பமில்லை – தீர்மானம் அரசுத் தலைவரின் கையில் தான் உள்ளது. ஆனால், அந்த முடிவு எடுக்கப்படுமா, எப்போது எடுக்கப்படும், எந்த அடிப்படையில் எடுக்கப்படும் என்பதே முக்கியக் கேள்வி. இதுவரை, இப்பிரச்சினையில் அரசாங்கம் தெளிவான கொள்கை அறிக்கை ஒன்றையும், காலக்கெடுவுடன் கூடிய செயல் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. இது தான் சம்பந்தன் பலமுறை சுட்டிக்காட்டிய குறை.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என்பது வெறும் தனிப்பட்ட கருணை நடவடிக்கையாக மட்டும் கருதப்படக்கூடாது. இது, போர் பிந்தைய நல்லிணக்கக் கட்டமைப்பில் அத்தியாவசியமான நம்பிக்கைக் கட்டுமான நடவடிக்கையாகும். மனித உரிமை மற்றும் சட்டத்தின் ஆட்சி கோணத்திலும், நீண்ட கால விசாரணை இல்லா தடுத்து வைப்புகள் மற்றும் தண்டனைகள் சர்வதேச அளவில் விமர்சனத்திற்குள்ளாகி வருகின்றன. அவற்றைத் தீர்ப்பது, இலங்கை அரசின் பொறுப்பு மட்டுமல்ல, நாட்டின் சர்வதேச மதிப்பையும் பாதிக்கும் விடயமாகும்.

நேற்றைய விவாதத்தில், நீதி அமைச்சர் 'சாதகமான தீர்வு கிடைக்கும்' என்ற நம்பிக்கையைச் சொன்னாலும், அதுவே ஒரு தெளிவான அரசாங்க உறுதி அல்ல. கைதிகளின் குடும்பங்கள் காத்திருப்பது நம்பிக்கைக்காக அல்ல; முடிவுக்காக. 14–30 ஆண்டுகளாக ஒரு குடும்பம் தந்தையையோ மகனையோ இழந்த நிலையில், 'சாதகமான தீர்வு வரும்' என்ற சொற்றொடர், வெறும் அரசியல் ஆறுதல் வார்த்தையாக மட்டுமே தோன்றுகிறது.

ஆகவே, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கான அரசின் நிலைப்பாடு தெளிவாகவும், வெளிப்படையாகவும் அறிவிக்கப்பட வேண்டும். அரசுத் தலைவர் பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துமா, இல்லையா என்பதை தாமதமின்றி தீர்மானிக்க வேண்டும். சட்டத்தின் வரம்புக்குள் மனிதாபிமான அணுகுமுறையைப் பின்பற்றுவது, நாட்டின் நீண்டகால சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் வலுவான அடித்தளம் அமைக்கும்.

சிறீதரனின் உரையும், சம்பந்தன் போன்ற தலைவர்களின் முந்தைய வலியுறுத்தல்களும், இந்த பிரச்சினையின் மையப் புள்ளியைச் சுட்டிக்காட்டுகின்றன – கொள்கைத் தீர்மானம் இல்லாமல், மனிதாபிமான பிரச்சினை என்றும் தீர்க்கப்படாது. நாடாளுமன்றத்தில் நடந்த இந்த விவாதம், அரசுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கிறது – அது வெறும் வாய்ப்பு மட்டுமல்ல, ஒரு பொறுப்பு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது, அரசின் அரசியல் விருப்ப சக்தியின் உண்மையான அளவை வெளிப்படுத்தும்.

## கரணவாய் இளைஞரின் சடலம் அக்கரையில் கரையொதுங்கியதுழி

யாழ்ப்பாணம் அக்கரை கடற்பரப்பில் நேற்று மாலை இளைஞன் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது. காரணவாய் பகுதியை சேர்ந்த இளைஞனின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது . இளைஞனின் இறப்புக்கான காரணம் தற்கொலையா அல்லது வேறு ஏதுமா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

## பாடசாலை மாணவர்களுக்கு தற்போது உளவியல் துயரம்



சமூகக் காரணிகள் பலவற்றால் பாடசாலை மாணவர்கள் தற்போது உளவியல் துயரங்களை அனுபவித்து வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் மூலம் இந்த தகவல் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உளநல பணியகத்தின் பதில் பணிப்பாளர் வைத்தியர் லக்மினி மகோதரத்தினா தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டில், நாட்டில் பாடசாலை சுகாதார ஆய்வு நடத்தப்பட்டது. பாடசாலை மாணவர்களை ஆய்வுக்குட்படுத்தி அந்தத் தரவுகளை ஆராய்ந்த போது, 22.4 சதவீதமானவர்கள் தனிமையை உணர்ந்தமையை கண்டறியக் கூடியதாக இருந்தது. 13- 17 வயதுக்குட்பட்ட மாணவர்களில் 11.9 சதவீதமானோர் துக்கம் காரணமாக தாம் நித்திரை கொள்வதில் சிரமத்தை எதிர்கொண்டதாகத் தெரிவித்தனர். சுமார் 18மூ பேர் மனச்சோர்வின் அறிகுறிகளைக் காண்பித்தனர் என வைத்தியர் லக்மினி மகோதரத்தினா சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் சுமார் 7.5 சதவீதமானோருக்கு நெருங்கிய நண்பர்கள் இல்லை. 25 சதவீதமான மாணவர்கள் தங்கள் உள் பிரச்சினைகளைப் பற்றி பேச யாரும் இல்லை என்று குறிப்பிட்டனர். அதாவது 75 சதவீதமான குழந்தைகளுக்கு நெருங்கிய நம்பிக்கைக்குரியோர் எவரும் இல்லை. இது எம்மை யோசிக்க வைக்கிறது. உண்மையில் இவ்வாறானதொரு நிலைமை இலங்கையில் காணப்படுகிறதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

இந்த ஆய்வின் அடிப்படையில் எமது நாட்டில் பெருமளவான மாணவர்கள் மன அழுத்தத்தில் இருப்பதாகத் தெரிகிறது. மாணவர்கள் மாத்திரமின்றி வயதானோரும் கூட இவ்வாறான அழுத்தங்களை எதிர்கொண்டிருக்கக் கூடும். பல்வேறு சமூகக் காரணிகள் மற்றும் பதட்டங்கள் இதற்கு பங்களிக்கக்கூடும் என்றும் வைத்தியர் லக்மினி குறிப்பிட்டார். நாட்டில் தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 8 தற்கொலைகள் இடம்பெறுகின்றன.

1996 ஆம் ஆண்டில், தற்கொலைகள் இடம்பெறும் வீதத்தில் இலங்கை உலகில் இரண்டாவது இடத்தில் இருந்தது. அதாவது ஒரு இலட்சம் பேருக்கு 47 பேர் தற்கொலை செய்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர், அரசுத் தலைவர் ஆணைக்குழுவுடன் இணைந்து எடுக்கப்பட்ட தீர்மானங்களால் இந்த விகிதம் கணிசமாகக் குறைந்தது. அந்த வகையில் இந்த விகிதம் தற்போது 100 000க்கு 15 என்பவாறு உள்ளது.

கடந்த இரண்டு முதல் மூன்று ஆண்டுகளில் சுமார் 3500 தற்கொலைகள் பதிவாகியுள்ளன. சமூகத்துக்கு வெளிப்படுத்தப்படும் சம்பவங்கள் மாத்திரமே ஊடகங்களால் அறிக்கையிடப்படுகின்றன. அவற்றைத் தவிர ஏனையவை அறிக்கையிடப்படுவதில்லை.

ஒட்டுமொத்த தற்கொலை விகிதத்தில் பெருமளவில் மாற்றமில்லை என்றாலும், சமீபத்திய தற்கொலைகள் உணர்ச்சிவசப்பட்டு எடுக்கப்படும் முடிவுகளாகவே இருக்கின்றன. இருப்பினும், ஊடகங்கள் கடந்த காலங்களில் செய்தது போல் இதுபோன்ற சம்பவங்களை தற்போது அடிக்கடி வெளியிடுவதில்லை. அது ஒரு பெரிய முன்னேற்றமாகும் வைத்தியர் லக்மினி மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசுத் தலைவர்களாக இருந்தோரின் சலுகை நீக்கச் சட்டமூலம் சமர்ப்பிப்பு

1986 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க அரசுத் தலைவர்களின் உரித்து சட்டத்தை இரத்துச் செய்யும்பொருட்டு ஆக்கப்பட்ட சட்டமூலத்தை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷ நாணயக்கார முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தார்.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை கூடிய போது ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, 1986 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க அரசுத் தலைவர்களின் உரித்து சட்டத்தை

நீக்கும் சட்டமூலம் நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

1978 (1) ஆம் இலக்க சட்டம் மற்றும் நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 52(5) பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் ஏதேனும் ஒரு சட்டமூலம் 7 நாட்களுக்கு பின்னரே முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த சட்டமூலம் 2025.07.31 ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது. பிரசுரிக்கப்பட்ட தினத்தை கணக்கில் எடுக்க முடியாது. அவ்வாறாயின் இந்த சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு இன்றுடன் (நேற்று) தான் 7 நாட்கள் நிறைவடைகின்றன. ஆனால் சட்டத்தில் 7 நாட்கள் நிறைவடைந்ததன் பின்னரே முதலாம் வாசிப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கு முரணாக செயற்பட வேண்டாம். இந்த சட்டமூலத்தை அடுத்த அமர்வில் முதலாம் வாசிப்புக்கு சமர்ப்பியுங்கள் என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய நீதியமைச்சர் 78(1) பிரிவை ஆராயாமல் இந்த சட்டமூலத்தை நாங்கள் கொண்டு வரவில்லை. இந்த சட்டமூலம் 2025.07.31 ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரிசுரிக்கப்பட்டது. 30 ஆம் திகதி வர்த்தமானி அச்சிடப்பட்டது. 31 ஆம் திகதியை ஏன் கணக்கில் எடுக்க கூடாது என்பதற்கான உரிய காரணிகள் ஏதும் கிடையாது.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இந்த சட்டமூலம் 7 நாட்கள் கருத்தாடலுக்கு விடப்பட்டதன் பின்னரே முதலாம் வாசிப்புக்கு சமர்ப்பிக்க நாடாளுமன்ற ஒழுங்குபத்திரத்தில் சேர்க்கப்பட்டது என்று குறிப்பிட்டு சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

உ

முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# வேண்டும் வரம் தரும் வரலக்ஷ்மி விரதம்

நூறாண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்தும் குறித்த சில அடியார்கள் வண்டில் கட்டிச் சென்று பொன்னாலையில் வரலக்ஷ்மி நோன்பு நோற்பார்களாம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆயினும், அண்மைக் காலத்தில் அதிகளவானவர்கள் நோற்கும் நோன்பாக இந்த விரதம் புகழ் பெற்றிருக்கிறது.

ஆயினும், இந்த நாளை எப்படிக் கணிப்பது ? என்று பலரும் பேசிக் கொள்வதையும் கேட்டிருக்கிறேன்.

பொதுவில் ஆடி மாத அமாவாசை கழிந்தால் சாந்திரமானம் என்ற கணிப்பின் படி, ஆவணி என்கிற சிராவண மாதம் பிறந்து விடும்.

இந்த ஆவணி மாத பௌர்ணமிக்கு முதல் வரும் வெள்ளிக்கிழமை அன்றே வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

விரதங்களில் மிகவும் எளிமையானதாகவும், ஒரு நாள் மட்டுமே அனுசரிக்கும் விரதமாகவும் இந்த நோன்பு காணப்படுகிறது.

சிறப்பாகஇதுவீட்டுவிரதம்தான்.அதுவும்சுமங்கலிப்பெண்கள் தாமே ஒரு கலசம் (வைத்து) அதில் மகா லக்ஷ்மி தேவியை வரவழைத்து வழிபட்டு நோற்கிற நோன்பு.

அப்போது ஒன்பது முடிச்சிட்ட மஞ்சள் நூலை தம் வலது கையில் கட்டிக் கொள்வதும் மரபு.

இந்த விரதத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்று அனுஷ்டிக்கும் பெண்கள்தம்வலதுமணிக்கட்டில்நூலைக்கட்டிக்கொள்வதாகும்.

பொதுவாக ரக்ஷை நூல்களை பெண்கள் இடது கையிலே கட்டுவதே மரபு. இவ்விரதத்திற்கு மட்டும் அது மாறுபடுகிறது.

இந்த நோன்பு தொடர்பிலும் அதை அனுஷ்டித்துப் பலன் பெற்றோர் பற்றியும் பல கதைகள் உண்டு. அவற்றில் ஏற்கத்தக்க செம்பொருட் கதைகளுடே இவ்விரதத்தை ஏற்றுப் போன்ற வேண்டும்.

இலங்கையில்வீட்டில்ஆசாரமும்செய்யும்முறைமையிலுள்ள கடினம் மற்றும் சுலோகங்களைச் சொல்லிச் செய்வதிலுள்ள நெருக்கடி, அவசரமான வாழ்வியல் காரணமாக பொதுவில் இந்த விரதத்தை குரு ஒருவர் வழிகாட்ட கோயில்களில் அனுசரிக்கிறார்கள்.

என்றாலும் இன்னமும் வீட்டில் வரலக்ஷ்மி பூஜை செய்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இது திருமகளைக் குறித்த விரதம். திருமகள் திருமாலின் வலமார்பில் அகலாது உறைபவள்.

ஆகவே இவ்விரதத்தை வட இலங்கையில் சிறப்பாக வண்ணை வேங்கட வரதராஜப்பெருமாள் கோயில் போன்ற விஷ்ணு ஆலயங்களில் ஆயிரக்கணக்கில்சுவடிஅனுஷ்டிக்கிறார்கள்.

இந்த பிரபஞ்சத்தை காத்தருளும் பெருமாளின் மனையாளான அவள் பேரழகின் வடிவமானவள்.

அவளே சகல சுக போகங்களுக்கும் உரியவள். எல்லா செல்வங்களும் வழங்குபவள்.

குபேரனாலும் பூசிக்கப்படுபவளான இந்த மஹாலக்ஷ்மித் தாயாரை வணங்கி வழிபடுவது எல்லாவித சுகங்களையும் தரும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

வளர்பிறை–சுக்ரவாரம்ஆகியவெள்ளி இரண்டும் இணையும் ஆவணித்திங்கள் அவளுக்குரியதாகிறது.

அழகு– மேன்மை– மென்மை– சௌபாக்யம் – அறிவு– நிறைவு– குழந்தைச்செல்வம் எல்லாம் தரும் அவள் அஷ்டலக்ஷ்மி ஆகிறாள்.



செந்தாமரையில் இருக்கும் அவள் செந்தாமரை மலர்களை த் தாங்குகிறாள். ஐஸ்வர்யத்தின் வடிவமான யானைகளால் அபிஷேகிக்கப்படுகிறாள்.

திருமாலின் பிராட்டி ஆயினும் சைவ மரபிலும் மஹாலக்ஷ்மிக்கு தனிச்சிறப்பு உண்டு.

பழைமையான சிவாலயங்களில் கருவறை, கோபுர வாசலில் எல்லாம் லக்ஷ்மியின் வடிவத்தைப் பார்க்கலாம். இங்கும் திருக்கேதீஸ்வரத்தில் இதை மிகத்தெளிவாக நோக்கலாம்.

மகாகவி பாரதியும் 'பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி மின்னு நவரத்னம் போல் மேனி அழகுடையாள் அன்னையவள் நம்மை எல்லாம் ஆதரிப்பாள்' என்கிறான்.

வேதம் ஸ்ரீ சூக்த மந்திரங்களாலே மஹாலக்ஷ்மியைப் போற்றித்துதிக்கிறது.

சைவ சமயிகளைப் பொறுத்த அளவில், ஆத்மார்த்த சிவ பூஜையிலும் மஹாலக்ஷ்மிக்கு சிறப்பான இடம் உண்டு.

ஆகவே சைவ – வைஷ்ணவ மரபுகளைக் கடந்த வழிபாடு இது.

இந்த அற்புதமான வழிபாட்டை செய்து நாமும் லக்ஷ்மி கடாக்ஷ சம்பன்னர்களாக வாழ்வோமாக.

**ஸ்ரீ சிவ ஸ்ரீ. தி.மயூரகிரிக்குருக்கள்,**
**நீர்வேலி**

# வள்ளுவமும் சமூக நல்லிணக்கமும்

மனிதன் தன்னிடம் மறைந்துள்ள தேவ குணங்களைத் தேடிக் கண்டறிய வேண்டும். சொர்க்கமோ நரகமோ யாவுமே கண்டறியாத் தூரத்தில் இல்லை. யாவுமே மனத்திலேதான் ஒழிந்து இருக்கிறது. அதனைத் தேடிக் கண்டு பிடித்தால் இந்த உலகத்திலே சொர்க்கத்தையே கண்டுவிடலாம். மகிழ்ச்சிக்கோ திருப்தி இன்மைக்கோ அலைய வேண்டியதே இல்லை. அதற்காக அடுத்தவரையோ அடுத்த சமூகத்தையோ வெறுப்புடனும் ஆக்ரோ ஷத்துடனும் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை. வானுலகையும் அங்கு வாழும் வாழ்வினையும் இந்த மண்ணுலகிலேகிலேயேகண்டுகொள்ளமுடியும்என்றுவள்ளுவம் உறுதி மொழி பகர்ந்து நிற்கிறது அல் லவா ? இந்த வழியில் வாழ எண்ணிவிடுவோம் ஆனால் அங்கு சமூக நல்லிணக்கம் வருவதில் தடைதான் உண்டோ ? மனிதர்கள் அனைவரையும் தேவராக்கும் தத்துவத்தை குறள் காட்டி நிற்கிறது. தேவரைத் தேடி அலையவே தேவையில்லை என்பதும் இதனூடாக புலப்பட்டு நிற்கிறதல்லவா ? தேவ குணங்கள் மேலோங்கி விட்டால் அங்கு நல்லிணக்கத்துக்கு வழி பிறந்தாகி விட்டது என்றுதானே எண்ண வேண்டும்.

அன்பினை செலுத்துவதில் அக்கறை இல்லாமல் இருப்பதும் , பழி வாங்கும் எண்ணம் மேலோங்கி இருப் பதும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு அருகிக் காணப்படுவதும், நல்ல தலைமைகள் இல்லாமல் இருப்ப தும், சமூக நல்லிணக்கம் ஏற்படுவதற்கு தடைக் கற்களாக இருக்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது. இதனை எல்லாம் தகர்த்து எறியும் பொழுதான் சமூக நல்லிணக்கம் ஏற்பட வழி பிறக்கும்.

அன்புடைமை, இனியவை கூறல், நடுவு நிலைமை,அடக்க முடைமை, பொறையுடமை, அழுக்காறாமை, வெஃ காமை, வெகுளாமை, வாய்மை, அறிவுடமை,கூடாவொழுக்கம், பண்புடமை, சான்றாண்மை, என்றெல்லாம் வள்ளுவம் வகுத்து அதன் வழி நடந்தால் சமூகத்தில் நல்லிணக்கம் பிறக்கும் என்று சொல்லி நிற்கிறது.

' இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் '

' அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு '

' சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையச் சுடும் '

' அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் '

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற '

சினத்தைதவிர்த்து,நன்னயம்ஓம்பி,அழுக்காற்றை, அவாவினை அகற்றி, அன்பினின் உயர்நிலையினை மனத்திருத்தி, மனத்திலே ஏற்படும் மாசுகளைத் தூக்கி எறிந்து, மனிதர்கள் வாழ்ந்தால் அந்த வாழ்வு சமூகத் தின் நல் வாழ்வுக்கு வழிசமைக்கும் என்று வள்ளுவம் நம்புகின்றது.

சமூக நல்லிணக்கம் என்பதை தேடி ஓட வேண்டியதில்லை. அதனை யாருமே கொண்டுவந்து தரப்போவதும் இல்லை. மனிதனால் உருவாக்கப்பட்ட சமூகத்தில் மனிதனாலேயே நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும். அப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த திருக்குறள் என்னும் வழிகாட்டி வந்து நிற்கிறது. காலத்துக்கு ஒவ்வாத வற் றைக் காட்டாமல் காலத்துக்கு உகந்தவற்றைக் காட்டி ,நடைமுறையில் கடைப் பிடிக்கும் சிந்தனைகளை முன் வைத்தும் நிற்கிறது. சமூக நல்லிணக்கம் இன்றியமையாமல் இருக்கும் இன்றைய காலகட்டத்தில் திருக்கு றளின் வழிகாட்டல் என்பது மிகவும் முக்கியத்தும் உடையதாக விளங்குவதால் அதன் வழியில் சென்றால் ' சமூக நல்லிணக்கம் ' ஏற்படும் என்பதில் ஐயத்துக்கே இடமில்லை என்பதே என்னுடைய மனக்கிடக்கையாகும்.



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண்- ஆஸ்திரேலியா**


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
46, Brodie Lane , Jaffna.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT

காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.08.2025இல் வெளியிடப்பெற்றது